பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**05 05 2026 TUESDAY 7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பருத்தி உற்பத்தியை மேம்படுத்துவதற்கான இயக்கத்தை தொடங்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

2. மேற்குவங்கம், தமிழகம் உள்ளிட்ட மாநிலங்களில் புதிய அரசு அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

3. மகாராஷ்ட்ராவில் பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் பள்ளிகளை மேம்படுத்துவதற்கு அம்மாநில அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

4. வியட்நாம் அதிபர் **To Lam** மூன்று நாள் அரசுமுறைப் பயணமாக இன்று புதுதில்லி வந்துள்ளார்.

5. இங்கிலாந்து சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் வைஷ்ணவி அட்கர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

- இனி விரிவான செய்திகள் - -

<<<<<<>>>>>>

பருத்தி உற்பத்தியை மேம்படுத்துவதற்கான இயக்கத்தை தொடங்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

ஐந்தாயிரத்து 659 கோடி ரூபாய் மதிப்பில் மேற்கொள்ளப்படும் இந்த இயக்கத்தின்மூலம், பருத்தி உற்பத்தியில் உள்ள பிரச்சினைகளை களைவது, உற்பத்தியை அதிகரிப்பது, தரத்தை மேம்படுத்துவது உள்ளிட்ட முக்கிய பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது.

அமைச்சரவை முடிவுகள் குறித்து செய்தியாளர்களிடம் தெரிவித்த தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ், நோய்கள் மற்றும் பூச்சிகளை தாங்கி வளரக்கூடிய பருத்தி செடி ரகங்களை உருவாக்குவது மற்றும் நவீன தொழில்நுட்பங்களை பருத்தி உற்பத்தியில் புகுத்துவது உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்தார்.

மாநில அரசுகள் மூலமாக செயல்படுத்தப்படும் இந்த திட்டம், மாநிலங்களில் உள்ள வேளாண் பல்கலைக்கழகங்கள் மூலமாக செயல்படுத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

தரம் மிக்க பருத்தியை உற்பத்தி செய்வதன் மூலம், அதன் ஏற்றுமதியை கணிசமாக அதிகரிக்க முடியும் என்றும் அமைச்சர் கூறினார்.

இந்த புதிய இயக்கத்தின் பயனாக 32 லட்சத்திற்கும் மேற்பட்ட பருத்தி உற்பத்தியாளர்கள் பயன்பெறுவர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

உள்நாட்டில் பருத்தி உற்பத்தியை அதிகரிப்பதன்மூலம் அதன் இறக்குமதியை குறைக்கலாம் என்றும் அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

சட்டப்பேரவைத் தேர்தல் நடந்து முடிந்த மேற்குவங்கம், தமிழகம், கேரளம், அஸ்ஸாம் மற்றும் புதுச்சேரியில், புதிய அரசு அமைப்பதற்கான நடவடிக்கைகள் விரைவாக நடைபெற்று வருகின்றன.

மேற்குவங்கத்தில் புதிய அரசு பதவியேற்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

குரு ரபீந்திரநாத் தாகூரின் பிறந்த நாளான இம்மாதம் 9-ஆம் தேதி அம்மாநிலத்தில் புதிய அமைச்சரவை பதவியேற்கும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

பதவியேற்பு நிகழ்ச்சியில் பிரதமர் திரு நரேந்திர மோடி, மத்திய அமைச்சர் திரு அமித் ஷா ஆகியோர் பங்கேற்பார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கேரளத்தில் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணி புதிய அரசு அமைப்பதற்கான ஆலோசனைகளை மேற்கொண்டு வருகிறது.

தமிழக வெற்றிக்கழகத்தின் சட்டமன்ற கட்சித் தலைவராக அக்கட்சியின் தலைவர் திரு விஜய் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

பனையூரில் உள்ள அக்கட்சியின் தலைமையகத்தில் சட்டப்பேரவைத் தேர்தலில் வெற்றிபெற்ற அக்கட்சியின் உறுப்பினர்கள் அவரை ஒருமனதாக தேர்ந்தெடுத்தனர்.

அக்கட்சியின் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் அனைவரும் ஆதரவு கடிதங்களை திரு விஜய்யிடம் அளித்துள்ளனர்.

தற்போது கேரளத்தில் உள்ள ஆளுநர் திரு ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் சென்னை வந்தவுடன் அவரிடம் ஆதரவு கடிதங்களை அளித்து ஆட்சி அமைக்க உரிமை கோரவுள்ளார்.

இதனிடையே, திமுக தலைவரும், முதலமைச்சருமான திரு மு.க.ஸ்டாலின் தமது ராஜினாமா கடிதத்தை, ஆளுநருக்கு அனுப்பியுள்ளார். இதனை ஆளுநர் ஏற்றுக்கொண்டுள்ளார்.

புதிய அரசு அமையும் வரை திரு மு.க.ஸ்டாலின் காபந்து முதலமைச்சராக நீடிக்குமாறும் ஆளுநர் கேட்டுக்கொண்டதாகவும் மக்கள் மாளிகை செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<<<>>>>>>

மேற்குவங்கத்தில் பிஜேபி-யின் சட்டப்பேரவை கட்சித் தலைவரை தேர்ந்தெடுப்பது தொடர்பாக, உள்துறை அமைச்சர் திரு அமித் ஷாவை மத்திய பார்வையாளராக பிஜேபி நியமித்துள்ளது.

ஒடிஷா முதலமைச்சர் திரு மோகன்சரண் மாஜி துணை பார்வையாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

அஸ்ஸாமில் பிஜேபி-யின் சட்டப்பேரவை கட்சித்தலைவரை தேர்ந்தெடுப்பதற்கு மத்திய அமைச்சர் திரு ஜெ பி நட்டா பிஜேபி-யின் மத்திய பார்வையாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஹரியானா முதலமைச்சர் திரு நயாப் சிங் சைனி துணை பார்வையாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளதாக பிஜேபி தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>>

புதுச்சேரி சட்டப்பேரவைத் தேர்தலில் வெற்றிபெற்றுள்ள தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி அமைப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

இக்கூட்டணியில் இடம்பெற்றுள்ள பிஜேபி உறுப்பினர்கள் புதுச்சேரி பிஜேபி தலைவர் திரு வி பி ராமலிங்கம், மத்திய அமைச்சரும், பிஜேபி தேர்தல் பொறுப்பாளருமான திரு மன்சுக் மாண்டவியா, மாநில பொறுப்பாளர் திரு நிர்மல்குமார் சுரானா உள்ளிட்டோர் புதிதாக சட்டப்பேரவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தங்களது கட்சி உறுப்பினர்களுடன் ஆலோசனை நடத்தினார்.

இக்கூட்டத்தில், பிஜேபி சட்டமன்ற கட்சித் தலைவராக திரு ஏ நமச்சிவாயம் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தேசிய ஜனநாயக கூட்டணியில் இடம்பெற்றுள்ள லட்சிய ஜனநாயக கட்சியின் தலைவர் திரு ஜோஸ் சார்லஸ் மார்டின், சுயேட்சையாக தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் திரு விக்னேஷ்வரன் ஆகியோரும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

தேசிய ஜனநாயக கூட்டணியின் அரசு நிர்வாகம் அணுகுமுறை உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் குறித்து இக்கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டதாக எமது புதுச்சேரி செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>>

மகாராஷ்ட்ரா மாநிலத்தில் தொழில்நுட்ப கல்வி மேம்பாடு மற்றும் பழங்குடியினருக்கான கல்வித் திட்டங்களுக்கு முதலமைச்சர் திரு தேவேந்திர பட்நவிஸ் தலைமையிலான அம்மாநில அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

அம்மாநிலத்தில் உள்ள ஐந்து ஆஷரம் ஆரம்ப பள்ளிக்கூடங்கள், உயர்நிலைப் பள்ளிகளாகவும், 19 உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்துவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

மலைப்பகுதிகளில் அமைந்துள்ள இந்த பள்ளிகளில் பழங்குடியின மாணவர்கள் கல்வி பெறுவதற்கு ஏதுவாக, இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மகாராஷ்ட்ரா அரசு தெரிவித்துள்ளது.

மலைப்பகுதிகளில் கல்வி இடைநிற்றலை குறைக்கவும், மாணவிகள் அதிக அளவில் தேர்ச்சி பெற்று உயர்கல்வி பெறும் நோக்கிலும் பள்ளிகள் தரம் உயர்த்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

2026-27-ஆம் கல்வியாண்டில் சோலாப்பூரில் புதிய அரசு பொறியியல் கல்லூரியை தொடங்குவதற்கும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம், கணினி அறிவியல், மின்னணு தொலைத்தொடர்பு உள்ளிட்ட பாடப்பிரிவுகள் இந்த பொறியியல் கல்லூரியில் கொண்டுவரப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

துல்ஜாபூரில் உள்ள பொறியியல் கல்லூரியை அரசு பொறியியல் கல்லூரி என பெயர் மாற்றம் செய்யவும் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இதனையடுத்து, அந்த கல்லூரியில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம், தரவு அறிவியில், இணையதள பாதுகாப்பு உள்ளிட்ட புதிய பொறியியல் பாடப்பிரிவுகளும் கொண்டுவரப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

தமிழ்நாடு, குஜராத் மற்றும் புதுச்சேரியில் மேற்கொள்ளப்பட்டுவரும் நெடுஞ்சாலை பராமரிப்புத் திட்டங்கள் குறித்து மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு நிதின்கட்கரி இன்று ஆலோசனை நடத்தினார்.

சாலைகளின் உறுதித்தன்மை மற்றும் பாதுகாப்பு தரத்தை உயர்த்துவது, விரைவான போக்குவரத்தை மேம்படுத்துவதற்கான

பணிகள் ஆகியவை குறித்தும் அவர் புதுதில்லியில் ஆலோசனை நடத்தினார்.

இந்த ஆய்வுக்கூட்டம் குறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள இணையமைச்சர் திரு ஹர்ஷ் மல்கோத்ரா, பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு சாலை கட்டமைப்பை விரிவாக்கம் செய்வதோடு மட்டுமின்றி, அதன் தரத்தை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் எடுத்து வருவதாக தெரிவித்துள்ளார்.

நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி, சாலைகளின் தரத்தை மேம்படுத்துவது மற்றும் நெடுஞ்சாலைகளின் கண்காணிப்பு கட்டமைப்பை வலுப்படுத்துவது ஆகிய முயற்சிகளையும் அரசு மேற்கொண்டுள்ளதாக திரு நிதின்கட்கரி தெரிவித்துள்ளர்.

<<<<<<>>>>>>

வியட்நாம் அதிபர் **To Lam** மூன்று நாள் அரசுமுறைப் பயணமாக இன்று புதுதில்லி வந்துள்ளார்.

உள்துறை இணையமைச்சர் திரு நித்யானந்தராய் அவரை வரவேற்றார்.

இதுதொடர்பாக வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், வியட்நாம் அதிபரின் புதுதில்லி வருகை, இந்தியா

— வியட்நாம் இடையிலான இருதரப்பு உறவுகளுக்கு உத்வேகம் அளிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார மற்றும் வர்த்தக ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான புதிய முயற்சிகள் மேற்கொள்வதற்கு வழிவகுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, வியட்நாம் அதிபர், பீகாரில் உள்ள புத்த கயாவுக்கு சென்று, மகா போதி கோவிலுக்கு சென்றார்.

<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

இங்கிலாந்தில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் வைஷ்ணவி அட்கர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், **4-6, 6-1, 6-1** என்ற செட் கணக்கில், இங்கிலாந்தின் **Allegra Korpanec Davies**—ஐ வென்றார்.

-------------------

தாய்லாந்தில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் **Manish Suresh Kumar -** அபினவ் இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை, **6-1, 6-7, 10-3** என்ற செட் கணக்கில், இந்தோனேஷியாவின் **Muhamad Rifqi —** ஹாங்காங்கின் **Tsz Fu Wong** இணையை வென்றது.

இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் பிரஜ்வால் தேவ் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

--------------

காங்கோ சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் திக் விஜய் பிரதாப் சிங் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், **7-5, 6-3** என்ற செட் கணக்கில், அமெரிக்காவின் **Dillon Beckles-**ஐ வென்றார்.

----------------

ஸ்பெயினில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் **Aron Paul — Amaan Siddiqui** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

-----------------

**Tumkur** சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் **Pooja, Sonal Patil** ஆகியோர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

--------------

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் சென்னை இன்று தில்லி அணியை எதிர்கொள்கிறது.

தில்லியில் இன்னும் சற்றுநேரத்தில் தொடங்க உள்ள இப்போட்டியில் டாஸ் வென்ற தில்லி அணி முதலில் பேட் செய்ய தீர்மானித்துள்ளது.

--------------

ஐஎஸ்எல். கால்பந்து போட்டியில் மும்பை இன்று ஈஸ்ட் பெங்கால் அணியை எதிர்கொள்கிறது.

மும்பையில் இப்போட்டி இரவு மணி **7.30**-க்கு தொடங்குகிறது.

--------------

உலக டேபிள் டென்னிஸ் சாம்பியன் போட்டியின் ஆடவர் பிரிவில் இந்தியா இன்று ஆஸ்திரியாவை எதிர்கொள்கிறது.

லண்டனில் இப்போட்டி இரவு மணி 9.30-க்கு தொடங்குகிறது.

**<<<<<<END>>>>>>**